# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்குமாகாணம்
## Provincial Department of Education – Northern Provi

### இரண்டாம் தவணைப்பரீட்சை 2022

| | | |
|---|---|---|
| **தரம் :- 11** | **தமிழ்மொழியும் இலக்கியமும் III** | **நேரம் :- 2 மணித்தியாலம்** |
| **சுட்டெண்:..............................** | **22 \| T \| III** | |

**கவனிக்க**
- அறிவுறுத்தலுக்கேற்ப **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- **1,2,3,4** ஆகிய வினாக்களுக்கும் **5,6,7** வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.
- இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்

1. தேம்படு பனையின் திரள் பழத்தொருவிதை
   வானுற வோங்கி வளம்பெற வளரினும்
   (அ) **'தேம்படு'** என்பது குறிக்கும் பொருள் யாது?
   (ஆ) **வானுற வோங்கி** என்ற தொடரைச் சந்தி பிரித்தெழுதுக

**2.** 'காற்றெல்லாம் தேனிழைக்க
   மலையடியிற் கண்வளர்த்தோம்
   (அ) **'காற்றெல்லாம் தேனிழைக்க'** என்பது எவ்வகை அணி
   (ஆ) **'கண்வளர்த்தல்'** என்பதால் கூறப்படுவது

3. குளித்து மணற் கொண்ட கல்லாவிளமை
   அளிதோ தானே யாண்டுண்டு கொல்லோ
   (அ) **அளிதோ தானே** என்பதால் கூறப்படுவது யாது?
   (ஆ) **யாண்டுண்டு** என்பதன் கருத்து யாது?

4. 'டிக்கற்' வேண்டாம் கையை விடு என்று கத்துவது வழக்கம். கட்டுச்சோறு கட்டிக்கொண்டு வந்திருக்க வேண்டும்
   (அ) **'டிக்கற்'** என்ற சொல்லின் தமிழ் வடிவம் யாது?
   (ஆ) **கட்டுச்சோறு** என்றால் என்ன?

5. மீசைக்கு விதை தூவி இளமை மழை பெய்ய
   பயிர் முளைத்த பருவம்
   (அ) **'இளமை மழை'** என்பது எவ்வகை அணி?
   (ஆ) **பயிர் முளைத்ததாகக்** கூறப்பட்டது எதனை?

6. கைராசிக்காரி நீங்கள் தான் மாமி என்ர தலப்புள்ளய ஏந்தனும் நேற்றும் அவ்வா ராத்தா வீங்கிய வயிற்றுடன் வந்தா

(அ) **மாமி** என்ற உறவுப்பெயருடன் அழைக்கப்பட்டவர் யார்?

(ஆ) **ராத்தா** என்ற உறவுப்பெயர்ச் சொல்லின் வேறு பெயர் யாது?

7. ………………………………….அன்பின்
இறைந்தாளை உரையென்ன நெறிதிறம்பாத்
தன்மெய்யை நிற்பதாக்கி

(அ) **இறைந்தாள்** என்பதால் கூறப்பட்டவர் யார்?

(ஆ) **நெறிதிறம்பாது** என்பது குறிக்கும் கருத்து யாது?

8. காட்சிப்படிமங்கள் மூலம் சொல்லக்கூடிய ஒன்றை வார்த்தை மூலம் கூற முயன்றால் அங்கே சினிமா சீரழிகின்றது என்கிறார்.

(அ) இங்கு குறிப்பிடப்படும் சினிமா மொழி யாது?

(ஆ) இவ்வாறு குறிப்பட்டவர் யார்?

9. பனிக்கூட்டம் விரட்டிவரும் பகலவனின் வீரம்
பசிக்கூட்டம் விரட்டி வரும் பண்புமிகு ஈரம்

(அ) 'பனிக்கூட்டம் விரட்டிவரும் பகலவனின் வீரம்' என்பது எவ்வகை அணி?

(ஆ) **ஈரம்** என்பது குறிக்கும் கருத்து யாது?

10. மாகமடங்கலும் மால்விடையும் பொன்
நாகமும் நாகமும் நாண நடந்தார்

(அ) **'நடந்தார்'** எனக் குறிப்பிட்டவர் யார்?

(ஆ) **'நாகம்'** என்பது குறிக்கும் இரு வேறு கருத்துக்களும் எவை?

(1x2=20 புள்ளிகள்)

2. **பின்வரும் செய்யுட் பகுதியையும் உரைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக**

(i) தண்டா மரையி னுடன் பிறந்தும் தண்தேன்
நுகரா மண்டூகம்
வண்டோ கானத் திடையிருந்து வந்து
கமல மதுவுண்ணும்
பண்டே பழகியிருந்தாலும் அறியார்
புல்லர் நல்லோரைக்
கண்டே களித்தங் குறவாடித் தம்மிற்
கலப்பர் கற்றோரே

அ) அறிவிலார் வாழ்வு எத்தகையது

ஆ) அறிவுடையோரின் சிறப்பை வெளிப்படுத்தக் கையண்ட உத்தியைக் குறிப்பிடுக

(ii) நீரெ டுத்து வருவதற் கவள்மணி

நித்தி லப்புன் னகைசுடர் வீசிடப்
போரெ டுத்து வருமதன் முன்செலப்
போகும் வேளை யதற்குத் தினந்தோறும்
வேரெ டுத்துச் சுதந்திர நற்பயிர்
வீந்திடச் செய்தல் வேண்டிய மன்னர் தம்
சீரெ டுத்த புலையியற் சாரர்கள்
தேச பக்தர் வரவினைக் காத்தர் போல

அ) தன்முன்னே காதலி வரும் அழகை பாரதியார் எவ்வாறு சிறப்பிக்கின்றார்
ஆ) மன்னர் தம்மியல்பாக எவற்றை வேண்டி நின்றனர்

(iii) சுற்றத்தார் தேவரொடுந் தொழ நின்ற
கோசலையைத் தொழுது நோக்கிக்
கொற்றத்தார்க் குரிசிலவ ராரென்று? என்று
குகன் வினவக் கோக்கள் வைகு
முற்றத்தான் முதற்தேவி மூன்றுலகு
மீன்றானை முன்னீன்றானைப்
பெற்றத்தால் பெறுஞ் செல்வம் யான் பிறத்த
லாற் துறந்த பெரியா ளென்றான்

அ) கோசலையின் பெருமைகளாகக் கூறப்பட்டவை எவை
ஆ) '**கோக்கள் வைகும் முற்றத்தான்**' என்ற தொடர் மூலம் வெளிப்படுத்தப்படுவது யாது

(iv) மூத்தம்மாவுக்கு பிள்ளை என்று உம்மா மட்டும் தான். அதுவும் பல நேத்திக்கடன் கொடுத்துப் பிறந்தது என பழைய நினைவில் தோய்ந்து இருப்பா. மூத்தம்மாவின் காதில் பெரிய தோடுகள் மேலிருந்து கீழாக நேர்வரிசையில் தொங்கிக்கொண்டிருக்கும். கேட்டா அது "அல்லுக்குத்து" என்பா. கழுத்தில் கருக மணிமாலை சதா மின்னிக் கொண்டிருக்கும். கையில் அகல செம்புக் காப்புகளென அமர்க்களமாய் பார்க்க அம்சமாய் இருப்பா.

அ) மூத்தம்மா பழைய நினைவுகளில் ஏன் தோய்ந்திருந்தா?
ஆ) மூத்தம்மா வருணிக்கப்பட்டுள்ள சிறப்பினைத் தருக

(iv) புலவர்களுடைய பாட்டுக்களில் அவர்கள் கருதாத கருத்துக்கள் அமைகிறதுண்டு. கம்பருடைய சில அடிகளில் அன்றைக்கு அப்படிப்பட்ட பொருள் அமைந்து கிடந்தது..! 'விலகு பிள்ளை' என்று வழக்கமாக சொல்லுவதைச் சொல்லுமுன்னமே விசுவநாதபிள்ளை மேடையில் விலகி இடம்கொடுத்தார். நாவலர் அவர்களின் நிலை - கம்பீரமான தோற்றம் - வீறுகொண்ட பார்வை - எண்ணங்களின் வேகம் இவற்றை வருணிக்க அந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு கம்பர் இல்லை. ''அது கிடக்க எடுத்துக்கொண்டு வா, தந்தி தபாற் கட்டுக்களை'' என்றார் நாவலர் அவர்கள். எல்லோரும் பிரமித்துப் போனார்கள்.

அ) அந்தச் சந்தர்ப்பத்தில் கம்பர் இருந்திருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது ஏன்?

ஆ) எல்லோரும் பிரமித்துப் போன விடயம் என்ன?

**3. கம்பியூட்டர் என்ற சிறுகதையில்**

(அ) கணிப்பொறியின் வருகைக்குப் பின்னர் வீட்டிலேற்பட்ட மாற்றங்கள்
(ஆ) கையாளப்பட்டுள்ள இலக்கியச் சான்றுகள்

என்பன இடம்பெற்றுள்ள வகையினை தெளிவுபடுத்துக

**அல்லது**

**இலட்சியமும் சமநோக்கும் என்ற கட்டுரையில்**

(அ) சிலப்பதிகாரக் காட்சி
(ஆ) கம்பராமாயணக் காட்சி

என்பவற்றால் இலட்சிய வாழ்வு சிறப்பிக்கப்படும் வகையினைத் தெளிவுபடுத்துக

**(15 புள்ளிகள்)**

4. **குழந்தையென எனது மனம் குதூகலிக்கும்** என்ற கவிதையில்,

(அ) முல்லைநில, மருதநில இயற்கைக் காட்சிகள்

(ஆ) உழவர் பற்றிய சித்திரிப்புக்கள்

என்பனவற்றைத் தெளிவுபடுத்துக

**அல்லது**

**திருக்குற்றாலக் குறவஞ்சியில்**

(அ) குற்றாலநாதர் சிறப்பிக்கப்படும் விதமும்

(ஆ) மக்களின் வாழ்வியல் அம்சங்களும்

இடம்பெற்றுள்ள வகையினை ஆதாரங்ளுடன் விளக்குக

(15 புள்ளிகள்)

**5ஆம், 6ஆம், 7ஆம் வினாக்களில் எவையேனும் ஒன்றுக்கு மட்டும் விடை தருக**

**5. எது நல்ல சினிமா என்ற கட்டுரையில்**

(அ) நாடகத்தின் தனித்துவமான பண்புகளும்

(ஆ) சினிமா சீரழிந்ததற்கான காரணங்களும்

சித்திரிக்கப்பட்டுள்ள விதத்தினைத் தெளிவுபடுத்துக

**6. திருக்குறளின் பேதைமை என்ற அதிகாரத்தில்**

(அ) பேதை அடையும் இழிவும்

(ஆ) உவமையணிப் பயன்பாடும்

இடம்பெற்றுள்ள வகையினை விளக்குக

7. **குகப்படலத்தில்**

(அ) பரதனின் நிலையும்
(ஆ) கைகேயியின் இழிவும்

சித்தரிக்கப்படுமாற்றைத் தெளிவுபடுத்துக

(10 புள்ளிகள்)